# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
www.supeedsam.com

திங்கட்கிழமை 04.11.2024 supeedsam.com supeedsam@gmail.com







# வெளிப்படையாக தெரியவந்த தமிழரசு கட்சியின் உட்கட்சி மோதல்



நாடாளுமன்ற தேர்தலில் சிறீதரன் மற்றும் சிறிநேசனை வேட்பாளர்களாக களமிறக்க வேண்டும் என்ற விருப்பம் தனக்கு இருக்கவில்லை என்று சுமந்திரன் கருத்து வெளியிட்டுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் சுமந்திரன் இப்படியான தவறான கருத்துக்களை வெளியில் விடக்கூடாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். மட்டக்களப்பு - செட்டிபாளையத்தில் அமைந்துள்ள

02 ஆம் பக்கத்தில்...

# தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞானபத்தில் திருத்தம்!



தமிழரசுக்கட்சியின் தேர்தல் விஞ்ஞபனத்தில் திருத்தமொன்றைச் செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழரசுக்கட்சியின் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...






# ஜே.விபிக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் பதிலளிப்பு

ஜே.வி.பி.யின் அதிகாரப்பகிர்வு, 13ஆவது திருத்தச்சட்டம் நிராகரிப்புக்கு மற்றும் பயங்கரவாத தடைச் சட்டம் சம்பந்தமான நிலைப்பாடு ஆகியவற்றுக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் பதிலளித்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றத்தேர்தல் -2024இற்கான தேர்தல் விஞ்ஞாபனம் நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா அரங்கில் வெளியிட்டு வைக்கப்பட்டது. குறித்த தேர்தல் விஞ்ஞாபனத்தின் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, 1956, 1958, 1961, 1977, 1981 மற்றும் 1983 ஆகிய

02 ஆம் பக்கத்தில்...











# தமிழ்த்தேசிய இலக்கையும் தமிழரின் அபிலாசையையும் மறந்து விமர்சிப்போருக்கு மக்கள் தேர்தலில் பதிலளிப்பர்

தம்முடைய வெற்றி ஒன்றையே நோக்காகக் கொண்டு தமிழ்த்தேசியத்தின் இலக்கையும் மக்களின் அபிலாசைகளையும் மறந்து மற்றைய வேட்பாளர்களை மிக மிக மோசமாக விமர்சிப்பவர்களுக்கான பதிலடியை வாக்களிப்பின் போது மக்கள் வழங்குவார்கள் என்று ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைமை

02 ஆம் பக்கத்தில்...






## தமிழ்த்தேசிய இலக்கையும் தமிழரின் அபிலாசையையும்

வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கோ.கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

மகிழவெட்டுவானில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார மக்கள் சந்திப்பிலேயே ஜனா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர்,எமது மக்கள் எமது மண்ணில் கௌரவமாக, சுதந்திரமாக, சமத்துவமாக வாழ்வதற்கான அரசியல் தீர்வொன்றினைக் காண்பதற்கு ஆயுதப் போராளியாக, தமிழ்த் தேசியப் போராட்டத்துக்குள் நுழைந்தேன். அதே தீவிரத்துடன் தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறேன். தமிழரின் அரசியல் அபிலாசையை வென்றெடுப்பதே இறுதி இலக்கு,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இணைந்திருக்கின்ற ஆயுதப் போராட்டப் பின்னணி கொண்ட கட்சிகளின் ஆதரவுடனேயே தமிழரின் ஒருமித்த ஒரு அரசியற் பலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணப்பட்டது. இதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குக் கிடைத்த பெரும்பான்மை வாக்குகளால் தேசியப் பட்டியலைப் பெற்று அரசியலுக்குள் நுழைந்தவர்களும், பெரும்பான்மைக் கட்சிகளில் இருந்து வந்தவர்களும் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான செயற்பட்டில் ஈடுபட்டு வருவது கவலையளிக்கிறது.

பேரினவாதக்கட்சிகளின் ஊடாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறமுடியாமல் தம்முடைய அரசியலை நிலைநாட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் தஞ்சம் புகுந்தவர்கள், உண்மையில் தமிழ் தேசிய அரசியலில் தீவிரமாகவும், தொடர்ச்சியாகவும் இயங்கி வருகின்ற தமிழ் மக்களின் நலன் சார்ந்த விடயங்களுக்காக ஆயுதமேந்திப் போராட முன்வந்து அவர்களின் வாழ்க்கைகளைத் தொலைத்தவர்களைப் பற்றிப் பேசுவது வேடிக்கையாக இருக்கின்றது.

எத்தனை விமர்சிப்புகள், தூற்றல்கள் வந்தாலும், தமிழ் மக்களுடைய அரசியல் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கான போராட்டம் சரியானதொரு தீர்வு கிட்டும் வரை தொடர்ச்சியாக இருந்து கொண்டே இருக்கும். இந்தத் தொடர்ச்சியான போராட்டம் தமிழ் மக்களின் அரசியற் கோரிக்கையான சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் என நாம் நம்புகின்றோம்.

இந்த நிலைப்பாட்டுக்காகவே தமிழ் மக்களுடைய ஒற்றுமையை விரும்புகின்ற செயற்பாட்டில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்ற ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தற்போது சங்குச்சின்னத்தில் போட்டியிடுகின்றது. இந்தச் சங்குச்சின்னத்தை ஆதரிப்பது தமிழ் மக்களின் ஒற்றுமையில் பிளவை ஏற்படுத்தி வருகின்றவர்களுக்கான பதிலடியாகவும் இருக்கும்.

இந்த விமர்சிப்பு வேடிக்கைகளுக்கு மக்கள் தலையசைப்பது ஒத்திசைவல்ல, தமிழ்த் தேசிய நலன் ஒன்றே தம்முடைய கொள்கை, தமது வாழ்க்கை என்று செயற்படுவர்களை ஆதரிப்பதே காலத்தின் தேவை என்பதனை உணர்ந்தமையினாலாகும். இலங்கையில் புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கான தீர்வினை பெறும் முயற்சியில் அரசியல் மேட்டுக்குடிப் பாணியில் மழுங்கடிக்கச் செய்ய முனைபவர்கள் இதற்கான பதிலடியை நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் நிச்சயமான வலியுறுத்தலுடன் பாண்பார்கள்.

தமிழ்த் தேசியம் ஒன்றே கொள்கை, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளே இலக்கு. ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சங்குச் சின்னத்துக்கு வாக்களிப்போம் பெரு ஆதரவுடன் வெற்றிபெறச்செய்வோம் என தெரிவித்தார்.




## ஜே.வி.பிக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் பதிலளிப்பு

ஆண்டுகளிலும் அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாகவும் தமிழ் மக்களுக்கெதிரான திட்டமிட்ட வன்முறை இனக்கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டது.

அரசு எவ்வித பாதுகாப்பையும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு வழங்கவில்லை, இச்சந்தர்ப்பங்களில் நாட்டின் ஏனைய பாகங்களில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் நிலம்ரூபவ் கடல் மற்றும் வான் வழியாக வடக்குக் கிழக்கிற்கு அன்றைய அரசாங்கங்களினால் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதன்மூலம் இவ்விரு மாகாணங்களையும் தமிழர் தம் தாயகமாகவும் அங்கு தான் தமிழர்களுக்கு பாதுகாப்பு உண்டு எனவும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டது ஆனால் தற்போது வடக்கு கிழக்கிலும் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதே நிலைமை.

இவ்வேளையில் இலங்கை ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திசாநாயக்கவின் அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு புதிய அரசியலமைப்பின் ஊடாக தீர்வு காணப்படும் புதிய அரசாங்கம் உருவாக்கப்பட்டு மக்களின் முன்னிலையில் சர்வஜன வாக்கெடுப்புக்கு சமர்ப்பிக்கப்படும் அதே நேரத்தில் மக்கள் தேசிய விடுதலை முன்னணியின் ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா 13ஆவது திருத்தச் சட்டமும் அதிகாரப் பகிர்வும் வடக்கு மக்களுக்கு அவசியமானவை அல்ல அவர்களுக்கு அவர்களின் பொருளாதார பிரச்சினைக்கே தீர்வு அவசியமாக உள்ளது.

ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் தங்களது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள இந்த விடயங்களைப் பயன்படுத்தி வருகின்றனர் என்றார். இவ்வறிவிப்பையிட்டு நாம் ஆச்சரியப்படவில்லை. ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளரின் அறிவித்தலுக்கு நாம் எமது கட்சியின் தேர்தல் அறிக்கையின் மூலமாகவே பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குவோம் என்று இதுவரை காலமும் கூறி வந்த தேசிய மக்கள் சக்தி தற்போது தமது நிலைப்பாட்டை மாற்றியுள்ளது என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பயங்கரவாத தடுப்புச்சட்டம் முற்றாக நீக்கப்படுவதற்கு நாம் தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம்.

தமிழ் அரசியல் தலைமையானது தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு பெருமளவு தன்னாட்சி அதிகாரத்தினை வழங்கும் ஒரு மாற்று அரசியல் ஏற்பாட்டினை பெற காலங்காலமாக பலமுறை முயற்சி செய்தது.

அடுத்தடுத்து ஆட்சி செய்த அரசாங்கங்களுடன் பல முயற்சிகளில் ஈடுபட்டிருந்தாலும் தேசிய இனப் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாதிருக்கின்றது.

2002 பெப்ரவரி மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளும் அன்றைய இலங்கை அரசாங்கமும் போர் நிறுத்த ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டதோடு 2002 டிசம்பரில் ஏற்பட்ட 'ஒஸ்லோ' உடன்படிக்கையில் சில அடிப்படைக் கோட்பாடுகளின் மீது இணக்கம் கண்டன அக்கோட்பாடு 'ஒன்றுபட்ட இலங்கைக்குள ; தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளில் உள்ளக சுயநிர்ணய உரிமைக் கொள்கையின் பிரகாரம் சமஷ்டி கட்டமைப்பின் அடிப ;படையிலமைந்த தீர்வொன்றை ஆராய்தல்' என்பதாகும்.

சர்வதேச நியமங்களின் படியும் சர்வதேச சாசனங்களின் பிரகாரமும் தமிழர்களாகிய நாங்கள் தனிச் சிறப்புமிக்க மக்கள் குழாமாவோம். ஒரு மக்கள் குழாமான நாங்கள் பேரினவாதத்தின் பிடிக்கு ஆட்படாது கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும் சுதந்திரமாகவும் ; அச்சமின்றியும் நாட்டின் ஏனைய மக்களுடன் சமத்துவமுள்ள மக்களாக வாழ விரும்புகிறோம்.

இதனால் தனித்துவமான மக்களாகவும் தேசிய இனமாகவும் நாம் எமது வரலாற்று ரீதியான வாழ்விடங்கள் தொடர்பிலும் எமக்குரிய எமது ஒருமித்த உரிமைகள் தொடர்பிலும் மேலும் எமது தலைவிதியை அல்லது எதிர்காலத்தை நாமே தீர்மானிப்பதற்கு எமக்கிருக்கும் உரிமை தொடர்பிலும் அதை உறுதிப்படுத்த ஒன்றுபட்டதும் பிளவுபடாததுமான இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு-கிழக்கில் தக்க தன்னாட்சி முறைமை ஒன்றை நடைமுறைப ;படுத்துவது தொடர்பிலும் திடசங்கற்பம் கொண்டிருக்கின்றோம்.

இவை தொடர்பிலான தற்போதைய அரசியலமைப்பு ஏற்பாடுகள் பொருத்தமற்றதாகவும் திருப்தியற்றதாகவும் அமைந்துள்ளன. தற்போதுள்ள ஏற்பாடுகள் பெரும்பான்மை மக்களுக்குச் சார்பானதாகவும் அவர்களது ஆதிக்கத்தை தமிழர் மீது திணிக்கும் வகையிலுமே அமைந்துள்ளன. நீதிரூபவ் சமத்துவம் சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தும் ஓர் அரசியலமைப்புக் கட்டமைப்பின்றி பல்லின சமூகம் ஒன்றில் ஜனநாயகம் செயற்பட முடியாது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்திடம் 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல் படுத்தி அதற்கு மேலாக அர்த்தமுள்ள 'அதிகாரப் பகிர்வினை கட்டியெழுப்பும்' என தொடர்ந்து உறுதிமொழி அளித்தது.

இவ்வாக்குறுதிக்கமைய 2015இல் இந்திய பிரதமர் இலங்கை பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது 'எமது சமூகத்தில் உள்ள அனைத்து பாகங்களின் அபிலாசைகளுக்கு நாம் மதிப்பளிக்கும் போது எம் நாட்டின் ஒவ்வொரு பிரஜையின் சக்தியையும் நமது நாடு உள்வாங்கிக்கொள்ளும். மாநிலங்கள் மாவட்டங்கள் மற்றும் கிராமங்களை இவ்வாறு வலுவூட்டப படும் பொழுது நாடு மென்மேலும் மேம்படும். கூட்டுறவு சமஷ்டியில் நான் திடமான நம்பிக்கை கொண்டவன்' என்பதையும் குறிப்பிட்டார்.

இறையாண்மை என்பது மக்களிடமே உண்டு; அரசிடம் அல்ல என இலங்கை தமிழரசுக் கட்சி உறுதியாக வலியுறுத்துகின்றது. தமிழ் மக்களை ஆளுகின்ற உரிமை கொழும்பிலிருக்கும் அரசாங்கத்திடம் அல்லரூபவ் தமிழ் மக்களிடமே பொதிந்திருக்கின்றது.

இதனடிப்படையில் மத்திய அரசிடமும் அதன் முகவரான ஆளுநரிடமும் அதிகாரங்களைக் குவிக்கின்ற 13ஆம் திருத்தச் சட்டம் முற்றிலும் பிழையானதொன்று.

எதேச்சாதிகார அரசிற்கு விடுக்கும் அடிப்படை ஜனநாயகச் சவாலின் மீதே எமது அரசியல் சித்தாந்தம் வேரூன்றி நிற்கின்றது.

இந்த நோக்கம் நாடளாவிய ரீதியில் செயற்படுவதற்கென நாம் கடந்த 2015 ஜனவரி 8இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது மாபெரும் பங்களிப்பை வழங்கியிருந்தோம். ஆகவே எமது அரசியலானது அனைத்து மக்களதும் தேவைகள் மற்றும் அரசியல் அபிலாஷைகளோடும் தமிழ் பேசும் மக்களது நீதி மற்றும் சமத்துவத்திற்கான போராட்டத்துடனும் பின்னிப் பிணைந்துள்ளது.

இந்த பின்புலத்திலேயே நாம் எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலை எதிர்கொள்கிறோம். இந்துமா சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் இனப்பிரச்சினைக்கு உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு இராஜதந்திரத்தை பதிலாக இந்திய நாட்டின் முக்கியத்துவமிக்க அணுகல் முறையும் இரு நாடுகளின் தமிழ்த்தேச மக்கள் இராஜதந்திரமும் செம்மையாக கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும்.

இலங்கை தமிழரசுக் கட்சி தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண அத்தியாவசியம் எனக் கருதும் கோட்பாடுகளும் பிரத்தியேக அரசியலமைப்பு ஏற்பாடுகளும் பிரதானமாக இத்தீவில் வாழும் பல்வேறு மக்களிடையே ஆட்சி அதிகாரங்களைப் பங்கிடுவதனூடாக பகிர்ந்த இறையாண்மையினை உறுதிப்படுத்தலைக் குறித்தது.

உண்மையான நல்லிணக்கத்தையும் நீடித்து நிலைக்கும் சமாதானத்தையும் இலங்கை மக்கள் அனைவருக்கும் பொதுவான அபிவிருத்தியையும் எய்துவதற்குப் பின்வரும் அதிகாரப் பங்கீட்டு அடிப்படைகள் முக்கியம் பெறுகின்றன.

ஒன்றுபட்ட வடக்கு-கிழக்கு அலகைக் கொண்ட சமஷ்டிக் கட்டமைப்புக்குள்ளே அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இது வடக்குக்கிழக்கில் வாழும் எந்த ஒரு மக்கள் மீதும் எவ்வித முரண்பட்ட தாக்கத்தையும் ஏற்படுத்தா வண்ணம் இருத்தல் அவசியம்.

ஒன்றுபட்டதும் பிளவுறாததுமான இலங்கைக்குள் வன்முறையற்ற சமாதானமான வழிமுறைகளில் அமைந்த பேச்சுவார்த்தையூடாக நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கின் வரலாற்றுக் குடிகளான தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் மேற்கொள்ளப்படும் அனைத்து அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளினதும் நன்மைகளைப் பெற உரித்துடையவர்கள் என்றுள்ளது.

## தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞானபத்தில் திருத்தம்!

வெளியீட்டு நிகழ்வுக்கு முன்னதாக குறித்த விஞ்ஞாபனத்தை மாவை.சோ.சேனாதிராஜாவிடத்தில் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. அதன்போது அங்கு பிரசன்னமாகியிருந்த சிவஞானம் சிறிதரன் விஞ்ஞாபனத்தின் ஐந்தாவது பிரிவில் காணப்படுகின்ற தவறைச் சுட்டிக்காட்டியுள்ளார். இதனையடுத்து விஞ்ஞாபன வரைவில் பங்கேற்ற சுமந்திரன் உள்ளிட்டவர்கள் அதனை மீளத் திருத்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். அந்த வகையில் குறித்த விஞ்ஞாபனத்தில் 'கடந்த காலத்தினை கையாளுதல்' எனும் ஐந்தாவது பகுதியின் முதலாவது பிரிவான 'நீதி மற்றும் பொறுப்புக்கூறல்' தலைப்பின் கீழ் இனக்கலவரத்தின் வரலாறு முழுவதும் தமிழ் மக்கள் அனுபவித்த மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்களுக்கு நீதி என்பது விட்டுக் கொடுப்பற்றதாகவும் அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதில் இன்றியமையாத ஒரு அங்கமாக அமைகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 'இனக்கலவரத்தின் வரலாறு முழுவதும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளமையானது, தவறானது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்கமைவாகரூபவ் குறித்த சொற்றொடர் இனமுரண்பாட்டின் வரலாறு முழுவதும் என்றோ அல்லது இனஅழிப்பின் வரலாறு முழுவதும் என்றோ மாற்றப்படவுள்ளதாக கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வெளிப்படையாக தெரியவந்த தமிழரசு கட்சியின் உட்கட்சி மோதல்

அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதுக்கடைகள் ஆரம்பித்து விட்டால் அந்த கடைகளுக்குள் சென்று கொள்வனவு செய்து பார்ப்பதும், அது ஒரு உணவகமாக இருந்தால் அங்குள்ள உணவுகளை உண்டு பார்ப்பதும் வாடிக்கையாக இருக்கின்றன.

இந்த தேசிய மக்கள் சக்தி என்கின்ற அந்த கடைக்குள் தமிழர்கள் சென்று அதனை பார்ப்பதற்கு அல்லது அதை சுவைப்பதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கு முயற்சிக்கின்றார்கள்.

ஆனால் அதற்கு முன்பாக நான் சொல்லக்கூடிய ஆலோசனை என்னவெனில், நடைபெறப் போகின்ற தேர்தலில் நாங்கள் ஏமார்ந்து விடாமல் தமிழ் தேசிய பிறப்பில் சோடை போகாமல், சோரம் போகாமல், பயணிக்க கூடிய தமிழரசு கட்சிக்கு வாக்களிப்பதன் மூலமாக அதனை ஒரு பலமான சக்தியாக மக்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த பேரினவாத கட்சிகள் எங்களை ஏமாற்றாமல் நாங்கள் ஏமாறாமல் இருப்பதற்கு வழி கூற வேண்டும், என்பதை இந்த இடத்தில் அழுத்தம் திருத்தமாக கூறி வைக்கின்றேன். கடந்த காலத்தில் சமாதான தேவதையாக வந்த சந்திரிக்கா பற்றி தப்பான கணக்கு போட்ட பின்னர் ஆறு மாதத்தில் அவருடைய சுய ரூபத்தை, விகார முகத்தை நாங்கள் பார்க்கக் கூடியதாக இருந்தது. அதே போன்றுதான் இப்போது சொல்லுகின்றேன் இந்த தேசிய மக்கள் சக்தி என்கின்ற விடயத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு அவர்களது நடத்தைகளை போக்குகளை அவதானிக்க வேண்டிய ஒரு தேவை இருக்கின்றது.

இந்த நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பாக வாக்குகளை அளித்து ஏமாந்து போகாமல் தமிழ் தேசியத்தை, தமிழர் உரிமையை, தமிழரின் ஒரு இனப்பிரச்சினை தீர்க்கக்கூடிய விதத்தில் செயற்பட்டு வருகின்ற தமிழரசுக் கட்சிக்கு சாதகமாக வாக்களியுங்கள்.

இதன் மூலமாக கீரை கடைக்கும் எதிர்க்கடை இருக்க வேண்டும் என்று சொல்வது போன்று தென்னிலங்கையில் பாரிய சக்தியாக விளங்குகின்ற இந்த ஆளுங்கட்சிகளுக்கு நாங்கள் பேரம் பேசுகின்ற ஒரு சக்தியாக இருந்து தமிழர்களின் உரிமைகளை பெறுவதற்கு தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். சர்வதேசத்தின் பொருளாக நாங்கள் இருக்க வேண்டுமே ஒழிய அந்த அமைச்சரவையில் இருந்து கொண்டு நாங்கள் எதனையும் சாதிக்க முடியாது என்பதை வெளிப்படையாக கூறி வைக்க விரும்புகின்றோம்.

எமது கட்சியிலிருந்து எவராவது அமைச்சர் பதவி எடுக்க வேண்டும் அதன் மூலமாக ஒரு கௌரவத்தை பெறவேண்டும் அதிகாரத்தை பெறவேண்டும் என்று நினைப்பவர்கள் இருக்க முடியாது. என்றுதான் நான் கருதுகின்றேன். அதைவிட எங்களுடைய யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளரான சுமந்திரன் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கின்றார். அதாவது சிறீதரன், மற்றும் சிறிநேசன் ஆகியோர் வேட்பாளர்களாக களம் இறக்கப்பட வேண்டும் என்கின்ற விருப்பம் தனக்கு இருக்கவில்லை, அவர்கள் களமிறக்கப்பட்டு இருப்பதை தான் விரும்பவில்லை என்ற பாணியில் கூறியிருக்கின்றார். ஒரு முடிவு எடுக்கப்பட்டதன் பின்னர் இவ்வாறு கூறுவது ஒரு பொருத்தமற்ற செயல் என்று நான் கூறுகின்றேன்.

மக்கள் விரும்புகின்ற வேட்பாளர்கள்தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் களம் இறக்கப்பட வேண்டுமே தவிர சில தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புக்கு உட்பட்டவர்கள் களத்தில் இறக்கப்பட வேண்டும் என்று கனவு காண்பது ஒரு விபரீதமான சிந்தனை அல்லது வெறுப்பு சிந்தனை அல்லது பழி வாங்குகின்ற சிந்தனையாக இருக்க முடியும். தயவு செய்து சுமந்திரன் அவர்களே தேர்தல் காலத்தில் இப்படியான தவறான கருத்துக்களை வெளியில் விடக்கூடாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மக்களின் தீர்ப்பு எப்படி இருக்கப் போகின்றது மக்களின் பார்வை எப்படி இருக்க போகின்றது ஒரு குறித்த மாவட்டத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களை பற்றி நாங்கள் எந்த பேச்சும் பேசவில்லை.

அப்படி இருக்கின்ற போது மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்ற என்னைப் பற்றி விமர்சனம் செய்வதற்கு அல்லது விபரீதமான ஒரு கருத்தினை வெளியிடுவதற்கு அவருக்கு அப்படியான உரிமை இல்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாங்கள் இயன்ற வரைக்கும் நாங்கள் ஒரு கட்டுக்கோப்பாக இருந்து தேர்தலை முகம் கொடுக்க வேண்டும். அவ்வாறு செயற்படுகின்ற போது சுமந்திரன் விபரீதமான கருத்துக்களை விமர்சன ரீதியான கருத்துக்களை இவ்வாறு கூறிக் கொண்டிருப்பது ஒரு மாவட்டத்தில் தீர்மானத்தை அல்லது ஒரு மாவட்டத்தின் தேர்தல் போக்குகளை தேர்தல் கணிப்புகளை மக்களின் தீர்ப்புகளை மாற்றி விடுகின்ற ஒரு செயற்பாடு போன்று நாங்கள் சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

தேவையற்ற கருத்து உழறினால் நாங்களும் அதற்குரிய பதில்களை அளிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்படுகின்றோம். குறிப்பாக எங்களிடம் ஊடகவியலாளர்கள் கேள்விகளை கேட்கின்றார்கள்.

எனவே மக்களால் விரும்பப்படுகின்ற ஒரு வேட்பாளரை, மட்டக்களப்பு மக்களை குழப்புகின்ற செயற்பாடுகளில் எவரும் செயற்படக்கூடாது என்பதை அழுத்தம் திருத்தமாக கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

புதிய ஆட்சியில் இணைந்து அமைச்சரவையை பெற்றுக்கொண்டு நடாத்துகின்ற ஒரு இணக்க அரசியல் என்று ஒன்று காணப்படுகின்றது. அரசாங்கம் நல்ல திட்டங்களை கொண்டு வந்தால் நல்ல செயற்பாடுகளை முன்னெடுத்தால் அதனை ஆதரித்துக் கொண்டு தமிழ் மக்களுக்கு சாதகமான ஒரு தீர்வினை பெற்றுக் கொள்ளுகின்ற முயற்சி இருக்கும். என தெரிவித்துள்ளார்.

# அம்பாறைத் தமிழர்கள் மிகவும் அவதானமாகவும், நிதானமாகவும் வாக்குப் பலத்தைச் செலுத்தாவிடின் நிச்சயம் அடிமைகளாகிவிடுவோம்

## தமிழரசின் அம்பாறை மாவட்ட முதன்மை வேட்பாளர் கலைஅரசன்





(சுமன்)

அம்பாறை மாவட்டத் தமிழ் மக்கள் மிகவும் அவதானமாகவும், நிதானமாகவும் எமது வாக்குப் பலத்தைச் செலுத்தவில்லை என்றால் நாங்கள் நிச்சயம் மாற்றுச் சமூகங்களின் அடிமைகளாகிவிடுவோம். எனவே கடந்த பாராளுமன்றத் தேர்தலில் விட்ட தவறினைத் திருத்தியமைக்க வேண்டும். என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட முதன்மை வேட்பாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தவராசா கலைஅரசன் தெரிவித்துள்ளார்.

திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எமது அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் விட்ட தவறிலிருந்து விடுபட்டு எமதுபிரதேசத்திலே எமது அரசியல்வாதியைத் தெரிவு செய்வதற்கு உறுதுணையாக இருந்து செயற்பட வேண்டும்.

எமது அம்பாறை மாவட்டம் மூன்று இனங்களும் வாழுகின்ற மாவட்டம். நாங்கள் மிகவும் அவதானமாகவும், நிதானமாகவும் எமது வாக்குப் பலத்தைச் செலுத்தவில்லை என்றால் நாங்கள் நிச்சயம் மாற்றுச் சமூகங்களின் அடிமைகளாகிவிடுவோம்.

எமது சமூகம் எவ்வாறான துன்ப துயரங்களைஅனுபவித்தது என்பது அனைவருக்கும் தெரியும். எமது மக்களின் துன்ப துயரங்களை எதிர்த்து நின்றதும், அவற்றை வெளி உலகத்திற்குக் கொண்டு சென்றது தமிழரசுக் கட்சியின் அரசியல்வாதிகளே.

இந்த நாட்டிலே பல வருடங்களாக யுத்த சூழலால் பாதிக்கப்பட்ட தமிழர்களை அந்த யுத்த சூழ்நிலைகளில் இருந்து மீள்வதற்கான செயற்பாடுகளை இந்த நாட்டை ஆண்ட எந்த அரசாங்கங்களும் முன்னெடுக்கவில்லை.

தற்போதும் நூறு வீதம் தமிழ் மக்கள் வாழுகின்ற இந்த பிரதேசமாகிய இந்த திருக்கோவில் பிரதேசத்திலும் கூட இன்னும் முழுமையான மீள்குடியேற்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை. இன்னும் எத்தனையோ பாடசாலைகள் இன்னும் புனரமைக்கப்படாமல் இருக்கின்றன.

எமது மக்களின் இவ்வாறான பிரச்சனைகள் தொடர்பாகவே எங்கள் வலியுறுத்தல்கள் இருந்தன. அதன் காரணமாகவே எங்கள் மீது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டன.

இந்த அடிப்படையில் இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் பல கட்சிகள் களமிறக்கப்பட்டிருக்கின்றன. அம்பாறை மாவட்டத்திலே தமிழர்களின் வாக்குகள் சுமார் 108000 மட்டில் இருக்கின்றன. இங்கு 66 கட்சிகள் களமிறங்கியுள்ளன. இவ்வாறு ஒவ்வொரு கட்சிகளும் வாக்குகளை சிறுகச் சிறுகப் பிரித்தார்களாயின், எமது தமிழ் பிரதேசங்களில் அவ்வாறு வாக்குகள் அளிக்கப்படுமாயின் எமது பிரதிநிதித்துவம் இல்லாமல் ஆக்கப்படும். அவ்வாறு இல்லாமல் ஆக்கப்பட்டால் நிச்சயமாக எதிர்காலத்தில் தமிழரசுக் கட்சியிடம் இருந்து தேசியப் பட்டியல் எதிர்பார்க்க முடியாது. இதை நாங்கள் உறுதியாகச் சொல்லுகின்றோம். நாங்கள் எம் மக்களிடம் பொய் சொல்லி அரசியல் செய்ய வேண்டிய அவசியமில்லை.

ஏனெனில் 2020ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் தலைவர், மட்டக்களப்பில் செயலாளர் ஆகியோர் தோல்வியுற்றிருந்த நிலையிலும், அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் தேவை என்பதற்காக கட்சிக்குக் கிடைத்த ஒரே ஒரு தேசியப் பட்டியலை அம்பாறை மாவட்டத்திற்கு வழங்க வேண்டும் என்று தீர்மானித்து எனக்கு வழங்கியிருந்தது. நானும் என்னால் இயன்ற வரையில் பல சேவைகளைச் செய்திருக்கின்றேன்.

அம்பாறை மாவட்டம் என்ற ரீதியில் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தை மாத்திரம் பார்க்க முடியாது. ஆனால் பரவலாக எமது தமிழ் பிரதேசங்கள் பலவற்றில் பல காலமாகத் தீர்க்கப்படாமல் இருந்த பிரச்சனைகளை ஓரளவுக்கேனும் தீர்த்து வைத்திருக்கின்றோம்.

தற்போது மாற்றம் என்ற ரீதியில் பல இளைஞர்கள் திசைமாறிச் செல்லுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாது தேசியப்பட்டியல் என்றும் எமது மக்களை ஏமாற்றுகின்ற முன்முனைப்பிலே களமிறங்கியிருக்கின்றார்கள். இதிலே எமது மக்கள் தான் சிந்திக்க வேண்டும். எமது சமூகத்திற்குப் பொருத்தமான அரசியல் எது என்பதை மக்கள் உணர வேண்டும்.

தமிழ்த் தேசியப் போராட்டத்தில் எமது அடிப்படை உரிமை மீட்பு, நில மீட்பு என்ற விடயங்களையே நாங்கள் முன்வைத்திருக்கின்றோம். அந்த அடிப்படையில் பொத்துவில் கனகர் கிராமம், திருக்கோவிலில் வன இலாகாவினால் தடுக்கப்பட்டிருந்த காணிகள் என்பன எமது தமிழரசுக் கட்சி அரசியல்வாதிகளால் மாத்திரமே மீட்கப்பட்டன. இங்கு திருக்கோவிலில் இல்மனைட் அகழ்வுக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும் போது நாங்களே எமது மக்களுக்காக முன்வந்தோம். அவ்விடத்திலேயே எமது தலைவர்களுடன் கதைத்து அதனைத் தடுத்தோம். அது நிரந்தரமான தடையாக இருக்க வேண்டும் என்றே நாங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

எனவே எமது மக்களுக்கான சேவைகள் பலவும் எம்மால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே எமது மக்கள் எப்போதும் எம்முடன் இருக்க வேண்டும். எமது அம்பாறை மாவட்டத் தமிழ் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்து தெரிவித்தார்.

# கொழும்பு பிரதிநிதித்துவம் கிடைத்தால் ராவத்தவத்தை மக்களின் பிரச்சினை தீர்க்கப்படும்

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வேட்பாளர் தர்ஷகசர்மா ஏற்பாட்டில் ராவத்தாவத்த மக்களுடனான சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போது தேசியப்பட்டியல் உறுப்பினர் பாபுசர்மாவும் கலந்து கொண்டார்.

இதன் போது ராவத்தாவத்த மக்கள் தங்கள் தேவைகளை பலரிடம் முறையிட்டு எந்த விதமான விமோசனமும் கிடைக்கவில்லை. தாங்கள் வாக்களிப்பதில் மிகுந்த ஏமாற்றம் கண்டிருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

மற்றும் தங்கள் வீட்டு வசதிகள் சுகாதார வசதிகள் மருத்துவ வசதிகள் போன்றவற்றில் தீர்ப்பதற்கு இதுவரையில் யாரும் வரவில்லை என தெரிவித்து இருந்தார்கள்.

அவர்களின் குறைகளை கேட்டு அறிந்து கொண்ட பாபு சர்மா, நீங்கள் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியில் இருந்து பிரதிநிதிகளை தெரிவு செய்து பாராளுமன்றத்திற்கு அனுப்பினால் உங்களுடைய குறைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை கௌரவ டக்ளஸ் தேவானந்தா மூலமாக எடுக்கப்படும் என உறுதிமொழி வழங்கினார்.

# கந்தப்புராணம் பாடலுடன் ஆரம்பித்த கந்தசஷ்டி விரதம்





( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் கந்த சஷ்டி விரதம் (2) சனிக்கிழமை கந்தப்புராணம் பாடலுடன் ஆரம்பித்தது.

நூற்றுக்கணக்கான விரதாதிகள் முதல் நாளிலேயே ஆலயத்திற்கு வருகைதந்து தர்ப்பை அணிந்து முறைப்படி விரதத்தை ஆரம்பித்தனர்.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் மற்றும் ஆலயகுரு சிவசிறி அங்குசநாதக்குருக்கள் முன்னிலையில் விரதம் அனுஷ்ட்டிக்கப்படுகிறது.

கலாபூஷணம் த.மகேந்திரா தலைமையிலான புராணம் பாடுவோர் கந்தப்புராணம் பாட பிரபல புராணபயனிகர் கலாபூஷணம் தம்பிமுத்து மகேந்திரா பொழிப்புரை வழங்கினார்.

ஆலயத்தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையில் நடைபெற்ற முதல் நாள் பூஜையில் ஆலய வண்ணக்கர் வ.ஜயந்தன் கணக்குப் பிள்ளை இ.லோகிதராஜா பொருளாளர் கோ.கிருஸ்ணமூர்த்தி சமய ஆர்வலர்களான க.பார்த்தீபன்( பிரான்ஸ்) மற்றும் வி.ரி.சகாதேவராஜா ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

இக் கந்தசஷ்டி விரதம் ஆறாம் நாளாகிய 07 ஆம் தேதி சூரசம்ஹாரத்துடன் நிறைவு பெறுகின்றது.

வழமைக்கு மாறாக ஏராளமான பக்தர்கள் விரதத்தினை இம்முறை அனுஷ்டிக்க வந்திருந்தனர்.

இவ்வருடம் கந்தசஷ்டி விரதத்திற்கான சஷ்டித்திதி 06 ஆம் தேதி புதன்கிழமை முன்னிரவு 10.18க்குகூடி மறுநாள் 07 ஆம் தேதி வியாழக்கிழமை முன்னிரவு 9.35 மணிக்கு கலைகிறது என்று பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் அங்கு தெரிவித்தார்.

ஆகவே விரதாதிகள் அதற்கேற்ப நடந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

எதிர்வரும் 8 ஆம் தேதி வெள்ளிக்கிழமை திருக்கல்யாணம் நிகழ்வுடன் விரத உற்சவம் நிறைவுபெறும் என்று ஆலய பரிபாலன சபையின் செயலாளர் அ.செல்வராஜா தெரிவித்தார்.

# பதுளை பேருந்து விபத்து
# தொழில்நுட்பக் கோளாறா? கவனயீனமா?

பதுளை, துன்ஹிந்த பேருந்து விபத்து தொழில்நுட்பக் கோளாறினால் ஏற்பட்டதா அல்லது கவனக்குறைவாக வாகனம் செலுத்தியதா? என்பதைக் கண்டறிய பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விபத்தில் காயமடைந்த 34 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் உயிரிழந்த மாணவிகளின் இறுதிக் கிரியைகள் (03) இடம்பெறவுள்ளன.

பதுளை - மஹியங்கனை பிரதான வீதியின் துன்ஹிந்த எல்ல பிரதேசத்தில் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து விபத்துக்குள்ளானதில் இரு மாணவிகள் உயிரிழந்ததுடன், 40 பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்து நடப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன், வேகமாக பேருந்து பயணித்த விதம் கார் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த கெமராவில் பதிவாகியிருந்தது.

பேருந்து தொடர்பில் இரசாயன பகுப்பாய்வு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட உள்ளதாக பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்த தெரிவித்தார்.

விபத்தின் போது பேருந்தின் சாரதி மூன்றாவது அல்லது நான்காவது கியரில் பயணித்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில், சுமார் 4 கிலோமீற்றர் செங்குத்தான பகுதியில் பேருந்து வேகமாகச் சென்றதால் வழுக்கி வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மண் மேட்டில் மோதியிருக்கலாம் என விசாரணை அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.



எவ்வாறாயினும் இயந்திரக் கோளாறா? அல்லது வாகனம் ஓட்டும் போது ஏற்பட்ட பிரச்சினை காரணமாக விபத்து ஏற்பட்டதா? என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

விபத்து நேரிட்ட போது பேருந்து எவ்வாறு இயக்கப்பட்டது என்பதை தொழில்நுட்ப ரீதியாக ஆராய்வதிலும் பொலிஸாரின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, விபத்தில் காயமடைந்த மாணவிகள் உட்பட 40 பேரில் 6 பேர் சிகிச்சை பெற்று பதுளை போதனா வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளனர்.

7 பேர் தொடர்ந்து மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# சனநாயக தமிழரசுக் கூட்டமைப்பின் காரியாலயம் திறப்பு

(த.சுபேசன்)

சனநாயக தமிழரசு கூட்டமைப்பின் (சுயேச்சை குழு -14) சாவகச்சேரி தொகுதிக்கான தேர்தல் அலுவலகம் 03/11/2024 ஞாயிற்றுக்கிழமை காலை சாவகச்சேரி நுணாவில் பகுதியை அண்மித்து ஏ9வீதியில் திறக்கப்பட்டுள்ளது.

சனநாயக தமிழரசுக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில்;



ஜனநாயக தமிழரசு கூட்டமைப்பின் (சுயேட்சைக்குழு -14) தலைவரும் - முதன்மை வேட்பாளருமாகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா உள்ளிட்ட வேட்பாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

# கல்முனையில் மஹ்மூத் நடமாடும் நூலகம் திறந்து வைப்பு





(நூருல் ஹுதா உமர்)

அரச சுற்று நிறுபத்திற்கு அமைய நூலக வாரத்தினை முன்னிட்டு தேசிய வாசிப்பு மாதம் அக்டோபர் 2024 'வழி காட்டும் தாரகைகளாம் நூல்கள் வாசிப்பால் வென்றிடுவோம் நாங்கள்' எனும் தொனிப்பொருளில் நடமாடும் நூலகம் திறந்து வைக்கும் நிகழ்வு கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை)யின் நூலக பொறுப்பாளர் ஏ.எல். நளீம் தலைமையில் பச்சை வீடு 9டத்தில் இடம்பெற்றது.

மிக சிறப்பான நெறிப்படுத்தலில் இடம்பெற்ற நடமாடும் நூலகத் திறப்பு நிகழ்வில் கல்லூரியின் அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார். நடமாடும் நூலகத்தில் சமயம், அகராதிகள், நாவல், கல்வி, அறிஞர்கள், பாடப்புத்தகத்துடன் தொடர்பான நூல்கள், செய்தி பத்திரிகைகள், கவிதைகள், சஞ்சிகைகள் என பல்துறை சார்ந்த நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

இடைவேளை நேரத்தில் கல்லூரி சமூகத்தினர் பயன்பெறும் வகையிலும் வாசிப்பினை மாணவி மத்தியில் சமூக மயப்படுத்துவதற்கான ஏற்பாடுகள், ஆலோசனைகள், வழிகாட்டல்களினை கல்லூரியின் நூலக பொறுப்பாளர் ஏ.எல். நளீம் அவர்களினால் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான ஹாஜியானி எஸ்.எஸ்.எம். சமதா மசூது லெவ்வை, ஏ.எச் நதிரா, உதவி அதிபர் எம்.எஸ் மனூனா, ஆசிரியர்கள், நூலக உத்தியோகத்தர்கள், நூலக சங்கத்தின் மாணவிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# இரண்டாம் தேசிய மொழி (சிங்கள) போட்டி நிகழ்ச்சியில் மஹ்மூத் மாணவிகள் முதலாம் இரண்டாம்


(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட இரண்டாம் தேசிய மொழி (சிங்கள) தினப் போட்டி - 2024 நிகழ்ச்சிகள் மட்/மட்/நல்லையா வித்தியாலயம் பிள்ளையாரடி, மட்டக்களப்பு இடம் பெற்றது.

இந்த போட்டியில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) சார்பாக தரம் 06 தொடக்கம் 09 பிரிவு வரையான மாணவிகள் பேச்சு, வாசிப்பு, நிகழ்ச்சிகளில் பங்கேற்று முதலாம், இரண்டாம் நிலைகளை பெற்று மூன்று மாணவிகள் தேசிய மட்ட இரண்டாம் தேசிய மொழி (சிங்கள) போட்டி நிகழ்ச்சிக்கு தெரிவு செய்யப்பட்டு கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

அதில் தரம் - 08 மாணவி ஐ.ஐ. சுமையா எழுத்து போட்டியில் கலந்து கொண்டு முதலாம் நிலையும், தரம் - 06 மாணவி எம்.ஐ. அமீஹா சஹ்தா எழுத்து போட்டியில் கலந்து கொண்டு இரண்டாம் நிலையும், தரம் - 09 மாணவி ஜீ.எப். சுக்னா ஹானிம் எழுத்து போட்டியில் கலந்து கொண்டு இரண்டாம் நிலையும் பெற்றுள்ளனர்.

தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிகளுக்கான தேசிய மட்ட இரண்டாம் தேசிய மொழி (சிங்கள) தினப் போட்டி - 2024 நிகழ்ச்சிகள் ஞாயிற்றுக்கிழமை நவம்பர் 03 ஆம் திகதி கல்வி அமைச்சு, இசுறுபாய பத்தரமுல்ல கொழும்பில் இடம்பெற உள்ளது. மொழிப் பிரயோகமும் கிரகித்தலும் போட்டி



நிகழ்ச்சியில் மாணவி வெற்றி பெற உற்சாகமளிக்கும் நோக்குடன் குறித்த மாணவிகளை அதிபர் அலுவலகத்துக்கு நேரடியாக அழைத்து கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் (SLEAS) அவர்களால் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

மாகாண மட்ட இரண்டாம் தேசிய மொழி (சிங்கள) போட்டி நிகழ்ச்சிக்கு மாணவிகளை திறம்பட வழிப்படுத்திய சிங்கள பாட இணைப்பாளர் ஏ.எம்.எம். அணிஸ் சிங்கள பாட ஆசிரியர்களான ஏ.எம். நௌஷாத், எம்.ஐ.எப். பாத்திமா சபானா, பாத்திமா ஸபினா மற்றும் சாதனை படைத்த மாணவிகளுக்கும் பெற்றோர்களுக்கும் பாடசாலை சமூகம் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக அதிபர் தெரிவித்தார். இந்நிகழ்வில் கல்முனைவலயக்கல்வி பணிமனையின் சிங்கள பாட ஆசிரிய ஆலோசகர் ஆர். ஸ்ரீஸ்கந்தராஜா பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மக்களோடு மக்களாக இருந்து பணியாற்றக் கூடிய உறுப்பினர்களைத் தெரிவுசெய்யுங்கள்

## ஏறாவூரில் சுனில் ஹந்து நெத்தி

(ஏறாவூர் நிருபர் -நாஸர்)

எமது நாட்டில் கடந்த காலங்களில் அரசாங்க அதிகாரிகள் தமது அலுவலகங்களில் தலைக்கு மேலே ஜனாதிபதியின் பெரிய புகைப்படங்ளை தொங்கவிட்டு ஜனாதிபதிக்காக கடமை செய்தார்கள்.

ஆனால் தற்போதைய புதிய ஜனாதிபதி தனது புகைப்படத்தைத் தொங்க விடாமல் மக்களுக்காக பணியாற்றுமாறு கேட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் உயர்பீட உறுப்பினர் சுனில் ஹந்து நெத்தி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு ஏறாவூரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் புஹாரி முகம்மட் தலைமையில் ஏறாவூர் பிரதான வீதியோரம் நடைபெற்ற இக்கூட்டத்தில் வேட்பாளர் சாஜித் ரக்கீஸ் உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் இக்கூட்டத்திற்கு வருகை தந்திருந்தனர்.

சுனில் ஹந்துநெத்தி இங்கு தொடர்ந்து பேசுகையில்;

கடந்தகாலங்களில் புதிதாக ஜனாதிபதியொருவர் தெரிவுசெய்யப்பட்டால் கிராம சேவையாளர் தொடக்கம் பொலிஸ் நிலையம் வரையிலான அனைத்து அரசாங்க காரியாலங்களிலும் விரைவாக ஜனாதிபதியின் பெரிய புகைப்படம் தொங்கவிடப்படும் நடைமுறை காணப்பட்டது.

சந்திரிகாவின் காலத்தில் சந்திரிக்காவுக்கு வயதான போதிலும் அழகான புகைப்படம் இருக்கும். மைத்திரியின் காலத்தில் வாயை ஓரமாகக் கிறுக்கி சிரிக்கும் படம் தொங்கவிடப்பட்டது.

ரணில் காலத்திலும் அவ்வாறே நடைபெற்றது. ஆனால் தற்போதைய ஜனாதிபதி தோழர் அனுர குமார திசாநாயக்க முதல் பணிப்புரையாக தனது படத்தைத் தொங்கவிடக்கூடாது எனக்கேட்டுள்ளார். அதேநேரம் தற்போது தேர்தல் காலமாக இருப்பதனால் பழங்கால வீடியோக்கள் சமூக வலயதளங்களில் வைரலாகின்றன. எப்போது? எந்த இடத்தில் பேசினார் என்ற விளக்கங்கூட தெரிவிக்கப்படாதிருக்கும். அதுபோன்று சகோதரி சரோஜா சவித்ரா போல்ராஜ் என்பவர் கடந்த பல வருடங்களுக்கு முன்னர் பேசிய பேச்சொன்று



தற்போது உலாவுகின்றன.

அவர் பேசுகின்ற பேச்சு எமது கட்சியின் கொள்கையல்ல. கட்சியின் கொள்கையினை ஜனாதிபதியே வெளியிடுவார்.

எனவே அவ்வாறான பேச்சுக்களை எவரும் எமது கட்சியின் கொள்கையாக நம்பிவிட வேண்டாம். இது முஸ்லிம் வாக்காளர்களைக் குழப்பமடையச்செய்வதற்கான சூழ்ச்சியாகும் என்றார்.

பாராளுமன்றத்தை கொள்ளையர்கள் அற்றதாக சுத்தப்படுத்துங்கள் என்று மக்கள் கூறினார்கள். இப்போது உங்களுக்குத் தெரியும். தேர்தல் நடைபெற முன்னரே பாராளுமன்றத்தின் அரைப்பகுதி சுத்தமாகிவிட்டது. அதிகம் பேர் தேர்தலில் போட்டியிடாமலே ஒதுங்கிவிட்டார்கள். அமீர்அலி, ஹிஸ்புல்லாஹ், அலிஸாஹிர் மௌலானா போன்றவர்களுக்குச் சொல்லுங்கள் இப்போது உங்கள் காலம் முடிவடைந்து விட்டது. நீங்கள் வீட்டில் ஓய்வு பெறலாம் என்று கூறுங்கள். புதிய தலைமுறையினர் பாராளுமன்றுக்கு வரவேண்டும் நாட்டில் ஊழல் மோசடிகள் ஒழிக்கப்படவேண்டும் என்பதுவே மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

ஏறாவூர் மக்களின் வாக்குளைப் பெற்றுக் கொண்டு கொழும்பிலிருந்து நிருவாகம் செய்கின்ற பிரதிநிதி எமக்குத் தேவையில்லை. எமது வாக்குளைப் பெற்றுக் கொண்டு கொழும்புக்குச் சென்று வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற உறுப்பினர் எமக்கு வேண்டாம். அமைச்சுப்பதவிகளை பணத்திற்கு வியாபாரம் செய்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் எமக்குத் தேவையில்லை.

மக்களோடு மக்களாக இருந்து பணியாற்றக் கூடிய உறுப்பினர்களைத் தெரிவுசெய்யுங்கள். ஏறாவூர் மண் எமக்குப்புதிதானதல்ல. இங்கு நீண்டகாலமாக அரசியல் செய்திருக்கின்றோம். கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கடைசியாக இங்கு வந்த பேசும்போது அடுத்த தடைவை எமது ஜனாதிபதியின் ஆட்சியிலேயே இங்கு வருவேன் என்று சொன்னேன். அவ்வாறே செய்திருக்கின்றேன். அதேபோன்று இப்போது சொல்கின்றேன் ஒரு பாராளுமன்ற பிரதிநிதியை எடுத்துக்கொண்டுதான் அடுத்த முறை ஏறாவூருக்கு வருவேன் என்றார்.



# எதிர்க்கட்சியில் இருந்த போது கூறியவற்றை ஜனாதிபதி அனுர நிறைவேற்ற வேண்டும்

## தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம்

(க.கிஷாந்தன்)

அனுர குமார திசாநாயக்க எதிர்க்கட்சியில் இருந்த போது மலையக மக்கள் மீதி மிகவும் அன்போடும் அக்கறையோடும் கருத்துகளை முன்வைத்து வந்தார். இப்போது அவர் ஜனாதிபதியாக அதிகாரத்தில் உள்ளதால் மலையக மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

மலையக 200 - திகாம்பரம் 20 பாராளுமன்ற உரைகள் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா அட்டன் டி.கே.டபுள்யூ. கலாசார மன்டாதில் இடம்பெற்ற போது ஏற்புரை நிகழ்த்துகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவர் எம். உதயகுமார் உட்பட பலர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

எனது அரசியல் வாழ்க்கைக்கு 20 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு இந்த நூல் வெளியிடப்படுகிறது. வெறுமனே விழாமபரதுக்காக என்று இல்லாமல் எனது உண்மையான சேவை மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதே நோக்கமாகும். 6 வருடங்கள் மாகாண சபையிலும் 14 வருடங்கள் பாராளுமன்றத்திலும் இருந்துள்ளேன். பிரதியமைச்சராக, கெபினட் அமைச்சராக இருந்ததோடு, நல்லாட்சி அரசாங்கத்தில் மலைநாட்டு புதிய கிராமங்கள் அமைச்சராக பதவியேற்று தலா ஏழு பேர்ச் காணியில் தனி வீட்டுத் திட்டத்தையும் இந்திய வீடமைப்புத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்திக் காட்டினேன்.



நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச சபைகள், செயலங்களை அதிகரித்ததோடு, மலையகத்துக்கென தனியான அதிகார சபையையும் உருவாக்கினேன். பிரதேச சபையின் ஊடாக தோட்டங்களுக்கு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியாது என்று இருந்த பிரதேசசபை சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்ததால் அதன் சேவையை தோட்ட மக்களும் பெற்றுக் கொள்ள முடிந்தது.

நான் தோட்டத் தொழிலாளியின் மகனாகப் பிறந்து தோட்டத்தில் வாழ்ந்து அந்த மக்களின் கஷ்ட நஷ்டங்களை புரிந்து வைத்திருந்ததால் மலையக மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற சிந்தனையோடு, அரசியலில் பிரவேசித்த போது, பல்வேறு எதிர்ப்புகளையும், சவால்களையும் சந்திக்க நேர்ந்தது. எனினும், தோட்ட மக்களோடு வாழ்ந்த அனுபவம் இருந்த காரணத்தால் எனது அரசியல் பயணத்தை இலகுவாக மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்திலிருந்து பல விடயங்கள் சொல்லப்பட்டு வந்துள்ளன. ஆனால், எமது காலத்தில் செய்து காட்டியுள்ளோம். உதாரணத்துக்கு அட்டன் புகையிரத நிலையத்தைச் சுற்றி அடிக்கப்பட்டிருந்த தகர வேலியை அகற்றி நவீன மயமாக்கி பிரதான பாதையை விஸ்தரித்து நகருக்கு புதுப் பொலிவை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

எனது அரசியல் பயணத்தில் மனோ, இராதா, உதயா ஆகியோர் உறுதுணையாக இருந்ததோடு, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்றத்தில் மிகுந்த ஒத்துழைப்பை வழங்கி வந்துள்ளார். நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் கண்டி மாவட்ட தமிழ் மக்கள் ரவூப் ஹக்கீமுக்கு ஒரு விருப்பு வாக்கை அளித்து அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்றார்.

# ஆளுமையுள்ள இளம் அரசியல் தலைவரான பாரத் அருள்சாமியை ஆதரித்து பாராளுமன்றம் அனுப்பிவையுங்கள்

## தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அரும்பாடுபட்டே கண்டி மாவட்ட தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் வென்றெடுக்கப்பட்டது. அதனை நாம் பாதுகாக்க வேண்டும். எனவே, ஆளுமையுள்ள இளம் அரசியல் தலைவரான பாரத் அருள்சாமியை ஆதரித்து பாராளுமன்றம் அனுப்பிவையுங்கள் - என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வேட்பாளர் பாரத் அருள்சாமியை ஆதரித்து கண்டி மஹியாவ மற்றும் குயின்ஸ் விருந்தகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

"கண்டியில் எமக்கு எதிராக அன்று வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டவர்கள் ஓடி ஒளிந்துக்கொண்டிருக்கின்றனர். இதனைத்தார் கர்மவினையென்பார்கள். நான் டீலர் அல்லர், லீடர். அதனால்தான் சவால் என தெரிந்தும் கண்டியில் களமிறங்கினேன். இன்றும் களத்தில் உள்ளேன்.



எனது கரங்கள் கறைபடியாத கரங்கள். எனவே கள்வர்கள் பட்டியலில் என்னையும் இணைக்க வேண்டாம் என அநுர தரப்பிடம் வலியுறுத்துகின்றோம். 225 பேரும் கள்வர்கள் எனக் கூறுபவர்களும் இதனை புரிந்துகொள்ள வேண்டும். ராஜபக்ச தரப்புடன் என்னை போன்றவர்களை ஒப்பிட வேண்டாம். பொதுத்தேர்தல் என்பது நமக்கான தேர்தல், நமது பிரதிநிதித்துவம் என்பது மிக முக்கியம். ஒரு இளம் வேட்பாளராக, ஆளுமையுள்ள அரசியல்வாதியாக நாம் பாரத் அருள்சாமியை கண்டி மாவட்டத்தில் களமிறக்கியுள்ளோம். நாம் ஐக்கிய மக்கள் சக்தியினர் அல்ல, ஐக்கிய மக்கள் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிகள். எனவே, எமக்கான தனித்துவமும் உள்ளது. எனவே, ரவூப் ஹக்கீம், பாரத் அருள்சாமி போன்ற தமிழ் பேசும் அரசியல்வாதிகளின் வெற்றி மிக முக்கியம். கண்டியில் பாரத் மற்றும் ஹக்கீமுக்கு வழங்கும் மனோவுக்கு வழங்கப்படும் வாக்குகளாக நினைத்துக்கொள்ளுங்கள். தம்பி பாரத் சட்டத்தரணி, அரசியல் ஆளுமை மற்றும் நிதானம் உள்ளது. கட்சி தலைமை மற்றும் கொள்கை மீது உறுதியாக உள்ளார்."- என்றார்.

# இன அடையாளம், கல்வி மேம்பாடு உள்ளிட்ட விடயங்களை மையப்படுத்தியே நான் தேர்தலில் போட்டியிடுகின்றேன்

## வேட்பாளர் பாரத் அருள்சாமி தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

புதிய பாராளுமன்றத்தில் புதிய அரசமைப்புக்கான ஏற்பாடுகள் இடம்பெறவுள்ளன. எனவே, கண்டி மாவட்டத்துக்கான தமிழ்ப் பிரதிநிதித்துவமென்பது கட்டாய தேவையாகும். எனவே, தமிழ் பேசும் மக்கள் ஒன்றிணைந்து என்னை சபைக்கு அனுப்பி வைப்பார்கள் என்று ஐக்கிய மக்கள் கூட்டணியின் கண்டி மாவட்ட வேட்பாளர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

கண்டி மஹியாவ தேர்தல் பிரச்சாரம் இடம்பெற்ற பின் கண்டி குயின்ஸ் கேட்போர் கூடத்தில் தமிழ் மற்றும் முஸ்லீம் வர்த்தக பிரமுகர்களுடன் கூட்டமும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜனநாயக மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.





அவர் மேலும் தெரிவிக்கையில்,

கண்டி மாவட்டத்தில் நான் அரசியல் பயணத்தை ஆரம்பித்தது முதல் இன்றுவரை கண்டி தமிழ் வர்த்தக சங்கம் எனக்கான அரவணைப்பையும், ஆதரவையும் வழங்கிவருகின்றது. அதேபோல கண்டி மாவட்ட மக்களும் எனக்கான ஆதரவை வழங்கிவருகின்றனர். அதனால் தான் பிரதான அதுவும் வெற்றி பெறக்கூடிய கட்சியொன்றில் வெற்றி வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளேன்.

அது மட்டுமல்ல ஆளுமையுள்ள பெருந்தலைவரான ரவூப் ஹக்கீமும் எம்முடன் இருப்பது மேலதிக பலமாகும். எமது முஸ்லிம் உறவுகளும் நிச்சயம் எனக்கான ஆதரவை தருவார்கள் என்பது உறுதி. அதேநேரம் கண்டி மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராஜரத்தினம் ஐயாவும் எனக்கான முழுமையான ஆதரவை வழங்கியுள்ளார்.

இன்று நாம் ஜனநாயக போரில் ஈடுபட்டுள்ளோம். எனவே, கண்டி மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். அதனை இல்லாது செய்வதற்கு முன்னெடுக்கப்படும் சதிகளை முறியடிக்க வேண்டும். சிறுபான்மையின மக்களின் பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தில் நிச்சயம் ஒலிக்க வேண்டும். தமிழ் பேசும் மக்கள் என்னையும், தலைவர் ரவூப் ஹக்கீமையும் நிச்சயம் பாராளுமன்றம் அனுப்பிவைப்பார்கள்.

கண்டி மாவட்டத்தில் தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை வென்றெடுக்க 2010 ஆம் ஆண்டு அடித்தளமிட்ட தலைவர் மனோ கணேசன் என்னை நேரடி வேட்பாளராக களமிறக்கியுள்ளமையும் எனக்கான பலமாக உள்ளது.

புதிய அரசமைப்பு நடவடிக்கை இடம்பெறும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். எனவே, மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் போன்ற தலைவர்கள் நிச்சயம் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும். அவர்களுக்கு பக்க பலமாக என்மையும் அனுப்பி வைக்க வேண்டும்.

இன அடையாளம், கல்வி மேம்பாடு உள்ளிட்ட விடயங்களை மையப்படுத்தியே நான் தேர்தலில் போட்டியிடுகின்றேன். என்றார்.

# 05,வது விகிதாசாரத்தேர்தல் 2004 மட்டக்களப்பு மாவட்டம்

✍பா.அரியநேத்திரன்

## அறிந்தவை அறியாதவை: வரலாற்று பகிர்வு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

### வரலாற்று முக்கியம் வாய்ந்த தேர்தலாக 2004 தேர்தலை கொள்ளலாம்..!

1977, தொடக்கம் 2001, வரை தமிழர் விடுதலை கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் ஐந்து பொதுத்தேர்தலை எதிர்கொண்ட தமிழ்த்தேசிய தலைமை 2004, ல் மீண்டும் இலங்கைதமிழரசு கட்சி வீட்டுச்சின்னத்தில் போட்டியிட்டது.

2001, ல் தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவான 15, உறுப்பினர்களில் ஆனந்தசங்கரி விடுதலைப் புலிகளை ஏகபிரதிநிதியாக ஏற்க முடியாது என அடம்பிடித்ததை தொடர்ந்து அதனால் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக தமிழர் விடுதலை கூட்டணியை நீதிமன்றில் ஆனந்தசங்கரி கொண்டு நிறுத்தி தடை உத்தரவை பெற்றதால் தமிழர் விடுதலை கூட்டணி அடுத்த தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டது. அதனால் 2004, ல் தமிழ்தேசிய கூட்டமைப்பு எந்த கட்சியில் எந்த சின்னத்தில் போட்டியிடுவது என்ற சிக்கல் நிலை உருவானது.

அப்போது 2004, மார்ச்மாதம் கிளிநொச்சி அரசியல் பணிமனைக்கு அழைக்கப்பட்ட தமிழர்விடுதலை கூட்டணி சார்பாக சம்பந்தன் ஐயா , மாவை சேனாதிராசா, ரெலோ செல்வம் அடைக்கலநாதன், ீகாந்தா, ஈபிஆர்எல்எவ் சுரேஷ் பிரமச்சந்திரன், அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கஜேந்திரகுமார், குமாரகுருபரன் உள்ளிட்ட கட்சி பிரமுகர்களுக்கும், தலைவர் பிரபாகரன் தமிழ்செல்வன், மற்றும் தளபதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் எந்தக்கட்சியில் பொதுத்தேர்தலை சந்திப்பது என்ற கருத்துகள் முன்வைக்கப்பட்டன. கலந்து கொண்ட கட்சி உறுப்பினர்கள் அவரவர் கட்சிகளை முன்னிலைப்படுத்தினர்.

எல்லோருடைய கருத்துக்களையும் செவிமடுத்தபின்னர் தலைவர் பிரபாகரன் இலங்கை தமிழ் அரசுக்கட்சியில் அதன் வீட்டு சின்னத்தில் பொதுத்தேர்தலை எதிர்கொள்ளுங்கள் என கூறினார்.

இதன் பிரகாரம் 2004, பொதுத்தேர்தல் தமிழ்தேசிய கூட்டமைப்பு இலங்கைதமிழரசுகட்சி வீட்டுச்சின்னத்தில் வேட்பு மனுக்கள் வடகிழக்கில் ஐந்து மாவட்டங்களிலும் கையளிக்கப்பட்டன.

அனைத்தும் வேட்பாளர்களும் விடுதலைப்புலிகளின் அனுமதியுடனேயே ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் நியமிக்கப்பட்டனர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பாக இலங்கை தமிழரசுகட்சி, டெலோ, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் இணைந்து வீட்டு சின்னத்தில் களமிறங்கின.

நான்கு கட்சிகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு கொண்டிருந்தாலும் யாழ்ப்பாணம், வன்னி அதாவது வடக்கு மாகாணத்தில் மட்டுமே ரெலோ, ஈபீஆர்எல்எவ், அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் உறுப்பினர்களுடன் விடுதலைப்புலிகள் சிபார்சுனால் தெரிவானவர்களும் இணைந்து வேட்பாளர்களாக போட்டியிட்டணர் ஆனால் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்மாறை மாவட்டத்தில் கிழக்கு மாகாணம் முழுவதும்

இலங்கை தமிழ் அரசு கட்சி சார்பாக மட்டக்களப்பில் ஜோசப் பரராஜசிங்கம், திருகோணமலையில் சம்பந்தன், துரைரெட்ணசிங்கம் மட்டும் நியமிக்கப்பட்ட போதும் ஏனைய அனைத்து வேட்பாளர்களும் விடுதலை புலிகளின் சிபார்சில் நியமிக்கப்பட்டவர்களாவர்.

வடக்கு கிழக்கில் மொத்த 2004.ல் மொத்த வேட்பாளர்கள்:45 யாழ்ப்பாணம்:12, வேட்பாளர்.09 ஆசனம் வன்னி:09, வேட்பாளர்.06 ஆசனம் மட்டக்களப்பு:08, வேட்பாளர்.05 ஆசனம் அம்பாறை:09, வேட்பாளர் 06 ஆசனம் திருகோணமலை;07, வேட்பாளர் 04 ஆசனம்.

2004, ல் 09, ஆக இருந்த ஆசனங்கள் ஆனால் 2024, ல் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 03, ஆசனங்கள் இல்லாமல் போய் தற்போது 06, ஆசனங்கள் மட்டுமே இந்த தேர்தலில் உள்ளது.

விகிதாசாரத்தேர்தலில் சனத்தொகையே தீர்மானிப்பது யாழில் தமிழர் சனத்தொகை குறைவால் இந்த நிலை என்பதை கவனத்தில் கொள்க!

**இதைபற்றி எவரும் ஏன் சிந்திப்பதில்லை..?**

**மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்கள்:**

01.ஜோசப் பரராஜசிங்கம்-மட்டக்களப்பு
02.த.கனகசபை-களுதாவளை
03.க.தங்கேஸ்வரி-கன்னன்குடா
04.சே.ஜெயானந்தமூர்த்தி-வாழைச்சேனை
05.கிங்சிலி இராசநாயகம்-மட்டக்களப்பு
06.பா.அரியநேத்திரன்-அம்பிளாந்துறை
07.ராஜன் சத்தியமூர்த்தி-மட்டக்களப்பு
08.கே.அரசரெத்தினம்-வாகரை

**தேர்தல் காலம் : பல நெருக்கடிகள்:**

வேட்பு கையளிக்கப்பட்டு மூன்று தினங்களால் விடுதலைப்புலிகளில் கருணா பிளவு ஏற்பட்டு மொதல் நிலை ஏற்பட்டது இதன் காரணமாக அச்சம் , உயிர் ஆபத்து, கொலை மிரட்டல் நிறைந்த நெருக்கடியான சூழல் நிலவியது தேர்தல் பிரசாரத்தை சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத அவலம் நிலவியது, தேர்தல் முடிவுற்றும் அது தொடர்ந்தது..

கருணா ஆயுத குழுவின் அச்சுறுத்தல் காரணமாக ஜோசப் பரராஜசிங்கம் முற்றாக தேர்தல் பிரசாரம் தடைப்பட்டது. அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டது போன்ற நிலை ஏற்பட்டது. அடுத்து வேட்பாளர் பா.அரியநேத்திரனின் ஆதரவாளர்கள் பிரசாரம் செய்ய விடாமல் எச்சரிக்கப்பட்டனர்.

விடுதலை புலிகள் அமைப்பில் இருந்து கருணா பிரிந்து தனிக்குழுவாக மட்டக்களப்பில் பிரதேசவாத கருத்தை விதைத்து மட்டக்களப்பில் உள்ள பல யாழ்ப்பாணத்தை சேர்ந்த வர்தகர்களுக்கு எதிராக மிகவும் கீழ்த்தரமான பிரதேசவாத முரண்பாடுகளில் ஈடுபட்டு அவர்களை வெளியேறுமாறும் அநாகரீக பிரசாரங்களை செய்தனர். இதனால் சிலர் மட்டக்களப்பு நகரை விட்டு வெளியேறினர்.

தேர்தல் பிரசாரங்களை சரியாக ஈடுபட முடியாதவாறு எட்டு வேட்பாளர்களில்



அவர்களுக்கு பிடித்தவர்களை மட்டும் வெற்றியடைவதற்கான பிரசாரங்களை கருணாகுழு மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் ஏற்படுத்தியிருந்தனர். அதில் குறிப்பாக பா.அரியநேத்திரன், சே.ஜெயானந்தமூர்த்தி ஆகிய இருவரையும் வன்னிப்புலிகளின் ஆதரவாளர்கள் என கருணாகுழு முத்திரை குத்தி மக்கள்மத்தியில் அவர்களுக்கு வாக்களிக்கவேண்டாம் என வெளிப்படையாக பிரசாரங்களை மேற்கொண்டனர்.

வேட்பாளராக இருந்த ராஜன்சத்தியமூர்த்தியும் அவருடைய மைத்துனரும் தேர்தல் இடம்பெற இருந்த நான்கு நாட்களுக்கு முன்னம் மட்டக்களப்பு திருமலை வீதியில் அவருடைய வீட்டில் வைத்து 2004, மார்ச்,30, ம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்த கொலையை விடுதலைப்புலிகள் மேற்கொண்டதாக கருணா குழு குற்றம்சாட்டி அவருடைய உடலத்தை ஊர்வலமாக மட்டக்களப்பு மற்றும் கொக்கட்டிச்சோலை பகுதிகளுக்கு கொண்டு மக்கள் அஞ்சலி செலுத்தும் நடவடிக்கையும் கருணாகுழு மேற்கொண்டது.மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் பீதி சூழல் ஏற்பட்டது.

இவ்வாறான அச்சுறுத்தலுடன் தேர்தல் 2004, ஏப்ரல்,04, ல் நடந்து முடிந்தது.

**2004,ல் மட்டக்களப்பு மாவட்ட**
**மொத்த வாக்குகள்: 3,03,928**
**அளிக்கப்பட்ட வாக்குகள் :2,54,023**
**வீதம் : 84%**
**நிராகரிப்பு: 12,648**

**கட்சிகள் பெற்ற வாக்குகள்:**

**தமிழ் தேசிய கூட்டமைப்பு : 1,61,011 ஆசனம் 04**
**ஶ்ரீலஙா முஸ்லிம் காங்கிரஸ் : 43,131 ஆசனம் 01**

**ஆசனம் பெறாத கட்சிகள்:**

**ஐ.ம.சு.முன்னணி :26,268**
**ஐ.தே.கட்சி:6,151**
**ஈ.பி.டி.பி :6,406**
**புளொட் : 1010**
**ஈ.பி.டி.பி : 4,153**

ஏனைய 06அரசியல் கட்சிகளும் 08 சுயேட்சை குழுக்களும் 650 க்கும் குறைந்த வாக்குகளையே பெற்றன.

**தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் விருப்பு வாக்கின் அடிப்படையில்..**

**தமிழ் தேசிய கூட்டமைப்பு::**

**01.த.கனகசபை -57,843 வாக்குகள்**
**02.க.தங்கேஸ்வரி -50,545 வாக்குகள்**
**03.சே.ஜெயானந்தமூர்த்தி-44,457வாக்குகள்**
**04.கிங்சிலி இராசநாயகம்- 38,633 வாக்குகள்.**
**ஶ்ரீலங்கா முஷ்லிம் காங்கிரஷ்**
**05. எம்.எஸ்.அமீர் அலி 21,232 வாக்குகள். (அமிரலி பின்னர் மகிந்த ராஜபக்ச அரசில் இணைந்தார்.)**

தெரிவு செய்யப்பட்டிருந்த கிங்சிலி இராசநாயகம் பதவி ஏற்க முன்னரே 2004, மே,15, ம் திகதி தனது பாராளுமன்ற பதவியை தானே நேரடியாக பாராளுமன்றம் சென்று பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் பதவி வி'லகல் கடிதத்தை கையளித்து பதவி விலகினார் அதனால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு விருப்பு வாக்கின் அடுத்த நிலையில் 36546, வாக்குகளை பெற்றிருந்த பா.அரியநேத்திரன் தேர்தல் திணைக்களத்தால் 2004, மே,16, ம் திகதி வர்தமானியில் அவர் பெயர் அறிவிக்கப்பட்டது. அதனால் 2004, மே, 18,ல் பா.அரியநேத்திரன் பதவிப்பிரமானம் செய்து கொண்டார்.

அதன் பின்னர் கிங்சிலி இராசநாயகம் ஐந்து மாதங்களுக்கு பின்னர் 2004,அக்டோபர்,19.ல் மட்டக்களப்பு நகரில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். இவரின் கொலைக்கு விடுதலைப்புலிகளே காரணம் என உறவினர்களால் குற்றம் சுமத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை சுதந்திரம் அடைந்த 1948, தொடக்கம் 2004. வரையும் எந்த பெண் பாராளுமன்ற உறுப்பினரும் தெரிவாகவில்லை ஆனால் 2004,ல் தான் மட்டக்களப்பை மாவட்டத்தில் முதல் பெண் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பெருமையை செல்வி கதிர்காமர் தங்கேஷ்வரிக்கு கிடைத்தது அதுவும் படுவான்கரைபெருநிலம் கன்னன்குடாவுக்கு கிடைத்தது.

இதுவரை நடைபெற்ற 1989 - 2020 வரையிலான பொதுத்தேர்தல்களுடன் ஒப்பிடும்போது 2004, தேர்தல் மட்டுமே மட்டக்களப்பு வாக்களிப்பு 80 சத வீதத்திற்கும் மேலாக பதிவானது.

வேட்பாளர்களின் விருப்பு வாக்குகளில் கனகசபை, தங்கேஷ்வரி இருவரும் ஐம்பதாயிரம் (50,000) தாண்டியதும் இதே தேர்தல் மட்டுமே.

2001 ல் தெரிவான அப்துல் காதர் (ீ.மு.கா )2004 தேர்தலில் போட்டியிட வில்லை.

2004, ல் ீலங்கா முஷ்லிம் காங்கிரஷ் முதன்மை வேட்பாளர் ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முதன்மை வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் தெரிவாகவில்லை.

ஆனால் விடுதலைப்புலிகளின் வேண்டுகோளுக்கு அமைவாக தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு கிடைத்த இரண்டு தேசிய பட்டியலில் ஒரு இடம் ஜோசப் பரராஜசிங்கத்திற்கு வழங்கி தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சரித்திரத்தில் ஒரேகட்சியில் இருந்து ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள்(4+1=5) தெரிவான வரலாறு 2004, தேர்தலில் மட்டுமே

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாக வடகிழக்கில் முதன்முறையாக 22,உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டபோதும் வடகிழக்கில் சொந்த மாவட்டங்களுக்கு சென்று சேவையாற்ற முடியாதவாறு கொலை அச்சுறுத்தல்கள் ஜனாதிபதி மகிந்த காலத்தில் ஏற்பட்டது.

தமிழ் ஆயுத ஒட்டுக்குழுக்களால் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாக செய்பட்ட த. கனகசபையின் மருமகன், பா.அரியநேத்திரனின் சகோதரர், க.தங்களஷ்வரின் செயலாளர், சே.ஜெயானந்தமூர்த்தியின் அக்காவின் மகன் ஆகியோர் 2006, நவம்பர் மாதம் நாடாளுமன்ற வரவு செலவு திட்ட வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாதவாறு மட்டக்களப்பில் கடத்தி மூன்று நாட்கள் வைக்கப்பட்டனர்.

இவர்களை ரி எம் வி பி பிள்ளையான் குழுவே கடத்தியதாக கூறப்பட்து.

★2004, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வடகிழக்கில் எட்டு மாவட்டங்களிலும் பெற்ற மொத்த வாக்குகள்: 633,654.

1மாமனிதர் ஜோசப்பரராசசிங்கம் 2025,டிசம்பர்,25, ல் மட்டக்களப்பு தேவாலயத்தில் கொலைசெய்யப்பட்டபோது அந்த தேசியபட்டியல் இடத்திற்கு.

முதலாவது தெரிவாக திருகோணமலையை சேர்ந்த இலங்கை வங்கி முகாமையாளர் விக்கினேஷ்வரனை நியமிப்பதாக கட்சி முடிவெடுத்தது.

அவர் தமது பதவி விலகல் கடிதத்தை திருகோணமலை இலங்கை வங்கிக்கு சமர்பிக்க சென்ற போது 2006, ஏப்ரல்,17,ம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார்!

2அதன் பின்னர்தான் இரண்டாவது தெரிவாக 2006, பெப்ரவரி 08, ம் திகதி வெலிகந்த வீதியில் சுட்டுக்கொல்லப்பட்ட முன்னாள பாராளுமன்ற உறுப்பினர் அம்பாறை திருக்கோயிலை சேர்ந்த மாமனிதர் சந்திரநேருவின் மகன் சந்திரகாந்தன் 2006, மே, மாதம் தேசியபட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

3யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராசா ரவிராஜ் கொழும்பில் வைத்து 2006, நவம்பர்,10,ல் சுட்டுக்கொல்லப்பட்டபோது அந்த இடத்திற்கு பட்டியலில் அடுத்த நிலையில் இருந்த சொலமன் குரூஷ் 2006,நவம்பரில் பாராளுமன்ற உறுப்பினரானார்.

4யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் கிட்ணன் சிவநேசன் 2008, மார்ச்,06, ல் ஏ,9, வீதியில் கன்னிவெடித் தாக்குதலில் கொலைசெய்யப்பட்டபோது பட்டியலில் அடுத்த நிலையில் இருந்த சட்டத்தரணி ீஷ்காந்தா 2008, மார்ச் மாதம் பாராளுமன்ற உறுப்பினரானார்.

5தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் விடுமுறையில் வெளிநாடொன்றுக்கு சென்று குறிப்பிட்ட நாளுக்குள் வரமுடியாமையால் அவர் பதவியை 2007, நவம்பர் இழந்தார். அவரின் வெற்றிடத்திற்கு யாழ்ப்பாணத்தை'சேர்ந்த ஜனாப் இமாம் 2008, ஜனவரியில் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றார்.

6அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதன் 2009, மே,14, ல் இந்தியா (சென்னை) சென்றபோது அங்கு மாரடைப்பால் மரணமானார் அந்த இடத்திற்கு பட்டியலில் அடுத்த நிலையில் இருந்த பாண்டிருப்பு வைத்தியர் தோமஷ் தங்கத்துரை 2009, யூண் பாராளுமன்ற உறுப்பினரானார்.

2004, பொதுத்தேர்தலில் 22, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர் அதில் மூன்று பேர் படுகொலை செய்யப்பட்டனர், ஒருவர் விடுமுறையை சரியாக அறிவிப்பு செய்யாமையால் பதவி பறிபோனது, இன்னொருவர் சுகவீனத்தால் மரணமானார்.

தொடரும்...

